# பொது இடத்தில் இருந்த வியாபாரப் பொருட்கள்

# பறிமுதல்



கோலாலம்பூர், நவ. 11-

ஜாலான் தெலாவி 4, லோரோங் ஆரா கிரி, பங்சாரில் பொது இடத்தில் வியாபாரப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்ததற்கு எதிராக கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் லெம்பா பந்தாய் கிளை அமலாக்கத்துறை நேற்று முன்தினம் நடவடிக்கை எடுத்தது.

பொது இடங்களில் வியாபாரப் பொருட்கள் வைக்கப்பட்டது தொடர்பில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அந்தப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் கோலாலம்பூர் மாநகர மன்ற அறிக்கை கூறியது.

1974ஆம் ஆண்டு சாலை வடிகால் கட்டட சட்டவிதிகள் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் ஜாலான் லொம்போங், தாமான் மிஹார்ஜா செராஸ், கோலாலம்பூரில் உள்ள கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டது.

அடையாளம் காணப்படும் பகுதிகளில் இதுபோன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று டிபிகேஎல் அறிக்கை கூறியது.